செ.வெ.எண் 1045 நாள் 29-11-2010

# செய்தி வெளியீடு – 29.11.2010

# தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழையால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரணப் பணிகள்!

## முதன்மைச் செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் அறிக்கை!

தமிழகத்தில் நவம்பர் மாதத் தொடக்கத்திலிருந்து வடகிழக்குப் பருவமழை தொடர்ந்து பெய்து வருகிறது. குறிப்பாக, தென் மாவட்டங்களில் கடந்த ஒரு வார காலமாகப் பெய்து வரும் கனமழை காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் நிவாரண நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த 25.11.2010 அன்று ஆய்வு செய்ததைத் தொடர்ந்து இன்று (29.11.2010) மீண்டும் ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது மழையினால் திருவள்ளூர், இராமநாதபுரம், ஈரோடு, மதுரை, கடலூர் மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட 301 குடும்பங்கள் மற்றும் 6,787 பேர் உடனடியாகப் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டு, அவர்களுக்கு நாள்தோறும் ஏறத்தாழ 10 ஆயிரம் உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்தனர்.

அப்பொழுது முதலமைச்சர் அவர்கள் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மாவட்ட ஆட்சியர்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் நிவாரணப் பணிகளை மேலும் விரைவுபடுத்திட வேண்டுமென்றும், பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உணவு, குடிநீர், தங்குமிடம் ஆகியவற்றிற்கு உடனடியாக ஏற்பாடுகள் செய்திட வேண்டுமென்றும், நிவாரண உதவிகளைச் சற்றும் தாமதம் இல்லாமல் உரியவர்களுக்கு வழங்கிட ஆவன செய்திட வேண்டுமென்றும்;

மழையின் காரணமாகப் பகுதியாகவும், முழுமையாகவும் சேதமடைந்த 1,254 குடிசைகள் மற்றும் வீடுகளுக்கு தலா ரூபாய் 2 ஆயிரம் வீதம் 25 இலட்சத்து 8 ஆயிரம் ரூபாயும், இறந்த 335 கால்நடைகளுக்கு முதற்கட்டமாக, 3 இலட்சம் ரூபாயும், இம்மழை காரணமாக, உயிரிழந்த 103 பேரின் குடும்பங்களுக்கு உடனடி நிவாரண உதவியாக மாவட்ட ஆட்சியர் அளவில், பேரிடர் நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு இலட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மேலும் ஒரு இலட்ச ரூபாயும் ஆக 2 இலட்சம் ரூபாய் வழங்கிட வேண்டுமென்றும் முதலமைச்சர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

மேலும், மழையினால் மதுரை, விழுப்புரம், தருமபுரி, தஞ்சாவூர், ஈரோடு, திருச்சி, கடலூர், நாகப்பட்டினம், திருவாரூர், அரியலூர், பெரம்பலூர் மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் ஏறத்தாழ ஒரு இலட்சத்து 42 ஆயிரம் ஹெக்டேர் விளை நிலங்கள் மழை நீரில் மூழ்கியுள்ளதால், மழை நீர் முழுமையாக வடிந்தவுடன் பயிர்ச் சேதம் குறித்து கணக்கிடப்பட்டு, அரசின் நிவாரண உதவிகள் உடனடியாக வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் முதலமைச்சர் தெரிவித்தார்.

20/11/15

ஒப்பம் . முனைவர் - ந. சுந்தரதேவன்

முதன்மை செயலர்/ வருவாய் நிருவாக ஆணையர்,
வருவாய் நிருவாகம், பேரிடர் மேலாண்மை மற்றும்
பேரிடர் தணிக்கும் துறை, எழிலகம்,
சென்னை–600 005.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9